Aparajitha

தளிர்த் திறன் திட்டம்

# வெற்றியின் விதைகள்

சனவரி
2017

# 21




| பொருள் | பக்கம் |
| --- | --- |
| வணக்கம்! | 2 |
| பதிவுகள் | 3 |
| சுவடுகள் | 6 |
| எதிரொலிகள் | 8 |


அபராஜிதா அறக்கட்டளை
5அ, வி.பி. இரத்தினசாமி சாலை
பீபிகுளம்
மதுரை 625 002
www.aparajitha.org
0452-4375252
info@aparajitha.org


செய்திமடல்
தனிச்சுற்றுக்கு மட்டும்

வாழ்க்கைத் திறன்களின் வழியாக நிலைமாற்றம்

# வணக்கம்!

"ஒருவருக்கு அன்றாட வாழ்வின் தேவைகளையும் வெல்விளிகளையும் (Challenges) திறம்படக் கையாளத் தேவையான தகவமைப்புத் திறன்களும் (Abilities for adaptive) உடன்பாட்டு நடத்தையும் வாழ்க்கைத்திறன்கள் ஆகும்" என வரையறுக்கிறது உலக நலவாழ்வு அமைப்பு. அத்திறன்களைப் பெற்ற ஒருவர் தான் கற்ற கல்வி, பெற்ற திறன், உற்ற மனப்பாங்கு ஆகியவற்றை தன் வாழ்க்கையில் தொடர்ந்து பயன்படுத்துகிறார். அதன் விளைவாக அவர் பொறுப்புடைய மனிதராக உருவாகிறார். பின்னர், தான் கற்றவைகளையும் பெற்றவைகளையும் உற்றவைகளையும் மற்றவர்களோடு பகிர்ந்து அவர்களையும் பொறுப்புடைய குடிமக்களாக மாற்ற விழைகிறார்.

அவ்வகையிலேயே, கடந்த 2011ஆம் ஆண்டு முதல் தளிர்த் திறன் திட்டத்தைச் செயற்படுத்தி பல நூறு மாணவர்களை பொறுப்புடையவர்களாக உருவாக்கிய கொங்கணாபுரம் ஆகநல் பள்ளி, தற்பொழுது தன்னுடைய சமூக வானொலியின் வழியாக தன்னைச் சுற்றியிருக்கும் மக்களையும் பொறுப்புடைய குடிமக்களாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. அதனைப் பற்றிச் செப்புகிறது இவ்விதழின் முதற்பதிவு. பள்ளிக்கு அப்பாலும் வேர்விட்ட தளிர்த்திறன் திட்டம் விடுதி மாணவர்களை எங்ஙனம் பொறுப்புள்ளவர்களாக மாற்றியிருக்கிறது என்பதனை எடுத்துரைக்கிறது இரண்டாவது பதிவு. குஜராத் மாநிலத்தில் பதியனிடப்பட்ட தளிர்த்திறன் திட்டம் அங்கு எங்ஙனம் பொறுப்புள்ள மாணவர்களை உருவாக்கியிருக்கிறது என்பதனை விளம்புகிறது மூன்றாவது பதிவு.

கடந்த மூன்று மாதங்களில் தளிர்த்திறன் திட்டத்தின் கால்கள் எங்கெங்கெல்லாம் தன் சுவடுகளைப் பதித்திருக்கிறது என்பதனை பட்டியலிடுகிறது இவ்விதழின் சுவடுகள் பகுதி. அச்சுவடுகளை காட்சி வடிவில் காட்டுகிறது இவ்விதழின் முகப்புப்படம். இதில் தற்பொழுது வெள்ளையாய் இருக்கும் பகுதிகள் அனைத்தும் விரைவில் வண்ணங்களால் நிரம்ப வேண்டும் என்பதே எமது அவா. . அந்த அவா நனவாக கைகொடுக்க வாருங்கள். . .

தொடர்ந்து உங்களின் ஆதரவையும் ஆலோசனையையும் எதிர்நோக்கும்,

*அரிஅரவேலன்*
*மேலாளர்*



*தளிர்த் திறன் திட்டமானது வாழ்க்கைத்திறன் கல்வியை ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்குகிறது. உலக நலவாழ்வு அமைப்பு பட்டியலிட்டு உள்ள பத்து வாழ்க்கைத் திறன்களை அடிப்படையாகக்கொண்டு மகிழ்வுக்கல்வி வடிவில் உருவாக்கப்பட்ட பாடங்கள் தொடக்கப்பள்ளி வகுப்புகளுக்கு ஆசிரியர் கையேட்டின் வழியாகவும் நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை வகுப்புகளுக்கு காணொளி வழியாகவும் கற்பிக்கப்படுகின்றன. பொறுப்புடைய மாணவர்களை உருவாக்கும் நோக்குடைய இத்திட்டம் வெள்ளோட்டமாக 2008-09 ஆம் ஆண்டில் ஐந்து மேல்நிலைப் பள்ளிகளில் தொடக்கப்பட்டு, 2009-10 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையால் தமிழகத்தில் அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் விரிவாக்கப்பட்டது. பின்னர் விருப்பம் உள்ள தொடக்கப்பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் ஆகியவற்றில் இப்பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. தற்பொழுது இத்திட்டம் தமிழ்நாடு, குஜராத், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், உத்தர பிரதேசம், பஞ்சாப், அரியானா ஆகிய ஏழு மாநிலங்களிலும் புதுச்சேரி ஒன்றியப் பரவிலும் செயலாக்கம் செய்யப்படுகிறது.*

# பதிவுகள்

## சமூக வானொலி வழியாக தளிர்த்திறன் திட்ட வாழ்க்கைத்திறன் கல்வி

ஒரு குறிப்பிட்ட நிலப்பரவில் வாழ்பவர்களுக்காக இப்பரவிலுள்ள கல்வி நிறுவனங்களோ, அல்லரசு அமைப்புகளோ வழங்கும் வானொலிச் சேவையே, "சமூக வானொலி" எனப்படுகிறது. இத்தகு வானொலிகள் இந்தியாவில் 2004 பிப்ரவரி 1ஆம் நாள் முதல் கல்வி நிறுவனங்களாலும் 2006 நவம்பர் 16ஆம் நாள் முதல் அல்லரசு அமைப்புகள், வேளாண்மை நிறுவனங்கள் ஆகியவற்றாலும் நடத்தப்படுகின்றன. 2016 நவம்பர் 1ஆம் நாள் நிலவரப்படி இந்தியாவில் 200 சமூக வானொலிகள் இயங்குகின்றன. இவற்றுள் 29 சமூக வானொலி நிலையங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று சேலம் மாவட்டம், கொங்கணாபுரத்தில் கொடைமாட்சி அறக்கட்டளையின் கீழ் இயங்கும் ஆகநல் வானொலி ஆகும். இது 2014 பிப்ரவரி 17ஆம் நாள் தொடங்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் காலை 10 மணி முதல் பகல் 1 மணி வரையும் மாலை 3. 30 மணி முதல் மாலை 6.30 மணி வரையும் 91.2 MHz அலைவரையில் ஒலிபரப்பாகும் இவ்வானொலியை அதன் நிலையத்திலிருந்து 25 கிலோ மீட்டர் சுற்றளவுப் பகுதியில் வாழும் மக்கள் கேட்கிறார்கள்.

இவ்வானொலியில் தொடங்கப்பட்ட நாளிலிருந்து வாய்ப்புக் கிடைக்கும்பொழுதெல்லாம் தளிர்த்திறன் திட்டப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டு வந்தன. கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் இதன் நிகழ்ச்சி நிரல் ஒழுங்குபடுத்தப்பட்டு, ஒலிபரப்பிற்கென முறையான கால அட்டவணை உருவாக்கப்பட்டு இருக்கிறது. அதன்படி, ஞாயிறு. செவ்வாய், புதன், சனி ஆகிய நாள்களில் காலையில் கால் மணிநேரம் தளிர்த்திறன் திட்டப் பாடல்களும் கால் மணிநேரம் தளிர்த்திறன் திட்டப் பாடங்களில் உள்ள செய்திகளும் ஒலிபரப்பப்படுகின்றன; மாலையில் அவை மறுஒலிபரப்பு செய்யப்படுகின்றன. திங்கள், வியாழன், வெள்ளி ஆகிய நாள்களில் காலை முழுவதும் "ஆகநல் நேயர்கள் ஆயிரம்" என்னும் தலைப்பில் ஒரு சிக்கலைப் பற்றி நேரலையில் நேயர்களோடு உரையாடல் நடைபெறுகிறது; உரையாடலின் முடிவில் தளிர்த்திறன் திட்டம் அச்சிக்கலுக்குக் கூறியிருக்கும் தீர்வு அதன் பாடத்திலிருந்து ஒலிபரப்பப்படுகிறது. எடுத்துக்காட்டாக, "சினம் தவிர்ப்பது எப்படி?" என்னும் தலைப்பில் வானொலி நிலையப் பொறுப்பாளரும் நேயர்களும் நேரலையில் உரையாடுவர்; அவ்வுரையாடலுக்கு இடையே சினம் தொடர்பான பாடல்களை ஒலிபரப்புவர். முடிவில் தளிர்த் திறன் திட்டத்தின் எதிர்மறை உணர்வுகளை எதிர்கொள்ளப் பழகுக பாடத்தில் கூறப்பட்டுள்ள சினத்தைக் கையாளும் முறைகளை ஒலிபரப்புவர். மாலையில் அவை மறுஒலிபரப்பு செய்யப்படுகின்றன. இவ்வகையில் இதுவரை, நட்பு, காலமேலாண்மை, வாழ்த்து, வீணாக்காதிருத்தல், இலக்கு அமைத்தல், மற்றவர்களை மதித்தல், கடின உழைப்பு, விடாமுயற்சி, பாராட்டு, பொறாமை, கவனித்தல், பிறபாலினரை மதித்தல், உரையாடுதல், ஆசிரியரை மதித்தல், பொதுப்போக்குவரவு, தேர்வு ஆகிய தலைப்புகளில் ஒலிபரப்பு நிகழ்த்தப்பட்டு நேயர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

# மாணவர் விடுதியில் தளிர்த்திறன் திட்டம்

தளிர்த்திறன் திட்டத்தை பள்ளி வளாகங்களுக்கு அப்பாலும் செயற்படுத்த பல்வேறு முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றுள் ஒரு கூறாக, மதுரையிலுள்ள சேவாலயா மாணவர் விடுதி, அன்னை சத்தியா அரசு குழந்தைகள் காப்பகம் ஆகியவற்றில் முறையே 2015-16, 2016-17ஆம் ஆண்டுகளில் தளிர்த்திறன் திட்ட வகுப்புகள் தொடங்கப்பட்டன.

மதுரையைச் சுற்றி அமைந்துள்ள சிற்றூர்களைச் சேர்ந்த சமூக பொருளாதாரத்தில் விளிம்புநிலையில் உள்ள மாணவர்கள் மதுரையில் தங்கி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி பெறவேண்டும் என்னும் நோக்கில் "சேவாலயா" மாணவர் விடுதியை காந்திய நிறுவனம் ஒன்று நடத்திவருகிறது. இவ்விடுதியில் ஆண்டுதோறும் ஏறத்தாழ 150 மாணவர்கள் தங்கிப் பயில்கின்றனர். இவர்கள் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமையும் தளிர்த்திறன் திட்டப் பாடங்களின் வழியாக வாழ்க்கைத் திறன் கல்வியை கடந்த இரண்டாண்டுகளாக பெற்றுவருகின்றனர். அவ்வகுப்பை அபராஜிதா அறக்கட்டளைப் பணியாளர்கள் வழிநடத்துகின்றனர்.



**சேவாலயா மாணவர்கள்**



**அன்னை சத்தியா
அரசு குழந்தைகள் காப்பக மாணவர்கள்**

தமிழக அரசின் சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு குழந்தைகள் காப்பகம், அன்னை சத்தியா அரசு குழந்தைகள் காப்பகம் என்னும் பெயரில் இயங்குகிறது. மதுரை மாவட்டத்திற்கான குழந்தைகள் காப்பகத்தில் அந்த மாவட்டத்தின் வெவ்வேறு பகுதியைச் சேர்ந்த ஆதரவற்ற 125 மாணவிகள் தங்கி மதுரையிலுள்ள உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பயில்கின்றனர். இவர்கள், ஒவ்வொரு சனிக்கிழமையும் ஒப்பானவரோடு கற்றல் (Peer Learning) முறையில் தமக்குத்தாமே வழிநடத்தி தளிர்த்திறன் திட்டப் பாடங்களின் வழியாக வாழ்க்கைத் திறன் கல்வியை கடந்த ஓராண்டாக பெற்றுவருகின்றனர்.

இம்முயற்சியின் விளைவாக, அம்மாணவர்களிடையே காலந்தவறாமை, பொறுப்புடைமை, தன்னம்பிக்கை, முரட்டுத்தனமின்மை, ஒழுங்கைப்பேணுதல் ஆகிய பண்புகளும் பாராட்டுதல், கோபத்தை கையாளுதல், ஒருங்கிணைத்தல், அணியாகச் செயற்படுதல், தலைமையேற்றல், பேச்சாற்றல் ஆகிய திறன்களும் மேம்பட்டிருப்பதைக் கவனிக்க இயலுகிறது.

# குஜராத்தில் டிம் டிம் தாரா

குஜராத் மாநிலத்தில் 2012-13ஆம் கல்வியாண்டு முதல் நடைபெற்று வரும் டிம் டிம் தாரா திட்டத்தால் மாணவர்களிடையே மெல்ல மெல்ல மாற்றங்கள் அரும்பி, மலர்ந்து, விரிந்து மணம்வீசுகின்றன. அவற்றிலிருந்து இதோ சில துளிகள்:

அகமதாபாத் மாவட்டத்திலுள்ள தன்துகா நகரில் அமைந்துள்ள பெண்கள் உயர் தொடக்கப் பள்ளியில் 2015-16ஆம் கல்வியாண்டு முதல் டிம் டிம் தாரா திட்டம் செயற்படுத்தப்படுகிறது.



இதனால் அம்மாணவர்களிடையே காலமேலாண்மை, நலவாழ்வு நன்னடத்தை, மற்றவர்களை மதித்தல் ஆகியவற்றில் உடன்பாட்டு நடத்தை மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. தன்னம்பிக்கை பெருகி இருக்கிறது. அதனை வெளிப்படுத்தும் வகையில் சப்னா, பாவ்னா என்னும் இரு மாணவர்கள் தாமே முன்வந்து பொறுப்பெடுத்து, இவ்வாண்டிற்கான டிம் டிம் தாரா வகுப்புகளை தம் ஆசிரியர்களின் துணையின்றி ஒப்பானவர் கற்றல் முறையில் தாமே வழிநடத்தி தம் வகுப்பு மாணவர்களுக்கு வாழ்க்கைத் திறன் கல்வியைக் கற்பிக்கின்றனர்.

அகமதாபாத் மாவட்டம் ராஜீவ்நகரிலுள்ள உயர்தொடக்கப் பள்ளியில் எட்டாம் வகுப்புப் பயிலும் கட்ரிஜாபர் என்னும் மாணவர் டிம் டிம் தாரா பாடங்களைக் கற்றபின்னர், தான் தொலைக்காட்சியைப் பார்க்கும் நேரத்தைக் குறைத்துக்கொண்டு, நூலகத்திலிருந்து நூல்களை எடுத்துவந்து படிப்பதிலும் தேர்விற்கு ஈடுபாட்டோடு ஆயத்தமாவதிலும் தனது ஓய்வு நேரத்தைச் செலவிடுகிறார். இதன் விளைவாக, இதுவரை எந்தப் போட்டியிலும் அச்சத்தால் பங்கேற்காத அவர், இம்முறை பேச்சுப்போட்டியில் பங்கேற்று நல்ல மதிப்பெண்களைப் பெற்று தன் ஆசிரியராலும் தலைமையாசிரியராலும் பாராட்டப்பட்டு இருக்கிறார்.



அகமதாபாத் மாவட்டம் ஃபங்கிடி என்னும் ஊரிலுள்ள உயர்தொடக்கப்பள்ளி ஆசிரியர் நிமிஷா, அப்பள்ளியில் டிம் டிம் தாரா பாடங்களைக் கற்பிக்கிறார். அவர், "குழந்தைகளிடம் இயல்பிலேயே நற்பழக்கங்கள் இருக்கின்றன. ஆனால், அவற்றை அவர்கள் அறிய மாட்டார்கள். டிம் டிம் தாரா அப்பழக்கங்களை தூண்டிவிடுகிறது. இதனால் அந்நற்பழக்கங்கள் அவர்களிடம் வேரூன்றித் தழைக்கின்றன. அத்தகு மாற்றங்கள் பலவற்றை என் மாணவர்களிடம் காண்கிறேன். எடுத்துக்காட்டாக, "பாராட்டிப் பழகுக", "கொடை கொடுத்ததுப் பழகுக" ஆகிய இருபாடங்களைக் கற்ற பின்னர், அவற்றில் கூறப்பட்டுள்ள செய்திகளை இணைத்துச் சிந்தித்த மாணவர்கள் சிலர், எம் தலைமையாசிரியரிடம் சென்று, 'நாங்கள் இந்தப் பள்ளியிலிருந்து கல்வியைப் பெறுகிறோம். அதற்கு நன்றி தெரிவிக்கும்வகையில் விடுமுறை நாளில் சிறிது நேரத்தை பள்ளி வளாகத்தை தூய்மை செய்வதற்குச் செலவிட விரும்புகிறோம்' எனக் கூறி, அவரது அனுமதிபெற்று பள்ளியைத் தூய்மை செய்கின்றனர். காலதாமதமாக பள்ளிக்கு வருவதை வழக்கமாகக்கொண்ட மாணவர்கள் சிலர் தற்பொழுது உரிய நேரத்திற்கு வந்துவிடுகின்றனர்" என்கிறார்.

# சுவடுகள்

*(2016 அக்டோபர் முதல் திசம்பர் வரையிலான நிகழ்ச்சிகள்)*

தமிழ்நாட்டில் 2008-09ஆம் ஆண்டில் 5 பள்ளிகளில் முன்னோட்டடமாகத் தொடங்கப்பட்ட தளிர்த்திறன் திட்டம் தற்பொழுது தமிழ்நாடு, குஜராத், ராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்தர பிரதேசம், பஞ்சாப், அரியானா ஆகிய ஏழு மாநிலங்களிலும் புதுச்சேரி ஒன்றியப் பரவிலும் உள்ள வெவ்வேறு வகையான பள்ளிகளில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அவ்வகையில் கடந்த மூன்று மாதங்களில் இத்திட்டம் எங்கெங்கு தொடங்கப்பட்டு இருக்கிறது என்பதைப் பற்றி இதோ ஒரு பறவைப் பார்வை:-

## அரியானாவில் டிம் டிம் தாரே

அரியானா மாநிலம் பஞ்ச்குலா மாவட்டத்தின் பார்வாலா என்னும் ஊரில் மத்திய இடைநிலைக் கல்வி வாரிய பாடத்திட்டத்தைப் பின்பற்றும் "த ஸ்காலர்ஸ் பப்ளிக் ஸ்கூல்" என்னும் பள்ளியில் 2016 நவம்பர் 10ஆம் நாள் டிம் டிம் தாரே தொடங்கப்பட்டது. இத்திட்டத்தை அம்மாநிலத்திலுள்ள பிற பள்ளிகளிலும் செயற்படுத்தத் தேவையான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## பஞ்சாப்பில் டிம் டிம் தாரே

பஞ்சாப் மாநிலம் ராஜ்புரா, பாட்டியாலா, டாபர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள "த ஸ்காலர்ஸ் பப்ளிக் ஸ்கூல்" பள்ளிகளிலும் 2016 நவம்பர் மாதத்தில் டிம் டிம் தாரே தொடங்கப்பட்டுள்ளது. அம்மாநிலத்திலுள்ள பிற பள்ளிகளிலும் செயற்படுத்தத் தேவையான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## தமிழ்நாட்டில் தளிர்த் திறன் திட்டம்



மதுரை மெட்ரோ சுழற்சங்கத்தினரோடு இணைந்து மதுரையிலுள்ள செங்குந்தர் உயர்நிலைப் பள்ளி, ம.அ.நா.உ.பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பா.நா.உ.அ.ப.தி. துரைராஜ் மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றில் தளிர்த்திறன் திட்ட முறையே நவம்பர் 14, 21, 28 ஆகிய நாள்களில் தொடங்கப்பட்டது. தளிர்த் திறன் திட்டக் காணொளிகளை மதுரை மெட்ரோ சுழற்சங்கத்தினர் அந்தந்தப் பள்ளியின் தலைமையாசிரியர்களிடம் வழங்கினர். இதற்கான ஒருங்கிணைப்புப் பணியினை அபராஜிதா கார்ப்பரேட் சர்வீஸஸ் (பிரைவேட்) லிமிடெட் மேலாளர் திருமிகு து. முருகன் மேற்கொண்டிருந்தார்.

# ஜவகர் நவோதயா பள்ளிகளில் தளிர்த்திறன் திட்டம்

1986ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட தேசியக் கல்விக் கொள்கையின் அடிப்படையில் இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் ஜவகர் நவோதயா பள்ளிகள் இயங்குகின்றன. காலங்காலமாக நகர்ப்புறங்களில் மட்டுமே கிடைக்கும் தரமான நவீனக் கல்வியை, பொருளாதார வசதியற்ற திறமையான ஊரக மாணவர்களுக்கும் வழங்க வேண்டும் என்பதே இப்பள்ளிகளின் நோக்கம் ஆகும். மாவட்டத்திற்கு ஒரு பள்ளி வீதம் 598 பள்ளிகள் 28 மாநிலங்களிலும் 7 ஒன்றியப் பரவுகளிலும் அமைந்திருக்கின்றன.

இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும் தளிர்த்திறன் திட்டத்தை வழங்கும் முயற்சியின் முன்னோட்டமாக அரியானா மாநிலம் பஞ்ச்குலா மாவட்டத்திலுள்ள மௌலி என்னும் ஊரில் அமைந்துள்ள ஜவகர் நவோதயா பள்ளியில் 2016 நவம்பர் 11ஆம் நாள் டிம் டிம் தாரே தொடங்கப்பட்டுள்ளது. புதுச்சேரி ஒன்றியத்தில் பெரிய காலாப்பட்டு என்னும் ஊரில் அமைந்துள்ள ஜவகர் நவோதயா பள்ளியில் 2016 நவம்பர் 19ஆம் நாள் தளிர்த்திறன் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.




ஜவகர் நவோதயா பள்ளி
மௌலி



ஜவகர் நவோதயா பள்ளி
பெரியகாலாப்பட்டு

அடுத்த கல்வியாண்டில் இப்பள்ளிகள் பலவற்றிலும் தொடங்குவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# எதிரொலிகள்

'தன்னம்பிக்கையும் பொறுப்பும் உடைய இளைஞர்' சமூகத்தை உருவாக்கும் உயரிய நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் தளிர்த்திறன் திட்டம், மாணவர்கள் தமது திறமைகளை வளர்த்துக்கொள்ளவும் வாழ்க்கையில் முன்னேறிச் செல்லவும் நிச்சயமாக உதவும். இத்திட்டத்தின் செயலாக்க வெற்றி, அதனைக் கற்பிக்கும் ஆசிரியர்கள், கற்கும் மாணவர்கள் ஆகியோரின் மகிழ்ச்சி நிறைந்த கருத்துகளின் மூலம் நன்றாகவே தெரிகிறது. பள்ளிக்கல்வியில் இத்திட்டம் ஆக்கப்பூர்வமான ஒரு புரட்சியை ஏற்படுத்தும்.

*- முனைவர் தா. சாமுவேல் லாரன்ஸ்*
*முன்னாள் துணை முதல்வர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.*

தளிர்த் திறன் திட்டம் மேலும் 3 மாநிலங்களில் விதைக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதனை அறிய உற்சாகமாக இருக்கிறது. மீதமுள்ள மாநிலங்களையும் (States) ஒன்றியப்பரவுகளையும் (Union Territories) இது சென்றடைவதைக் காண இயலுமென நம்புகிறேன்.

*- கீதா சுந்தரம்*
*சென்னை*

தளிர்த்திறன் திட்டத்தால் தொடப்பட்டு நிலைமாற்றமடைகிற வாழ்க்கைகளின் சான்றுரைகள் கவனத்தைக் கவர்கின்றன. இந்நற்பணியால் நான் ஈர்க்கப்பட்டேன். இந்திய நாட்டைக் கட்டியெழுப்புவதில் இந்திய இளைஞர்களை பங்கேற்கச் செய்யும் நிலைமாற்றப் பெரும்பணியில் உங்களது முயற்சிகள் அனைத்தும் இணைய வாழ்த்துகிறேன்.

*- செல்வி சந்தோஷம்*
*தலைவர் - நிர்வாகம், டி.வி.எஸ்.லட்சுமி வித்தியா சங்கம், மதுரை.*

தளிர்த்திறன் திட்டம், மத்தியப் பிரதேசத்திற்குள் தனது பாதையை உருவாக்கியிருப்பதை அறிந்து மகிழ்ச்சி. அங்கும் வெற்றிபெற வாழ்த்துகள்.

*- முனைவர் எஸ். இராதாகிருஷ்ணா*
*ஹைத்திராபாத்.*

தளிர்த்திறன் திட்டம் மத்தியப்பிரதேசத்தில் செயலாக்கம் செய்யப்படுவதையும் மேற்கு இந்தியாவும் மத்திய இந்தியாவும் அதனை வரவேற்பதையும் அறிய மகிழ்ச்சி.

*- சோபானா ராஜசேகர்*
*முதன்மை மக்கள் அலுவலர், அபராஜிதா, மதுரை.*

தளிர்த்திறன் திட்டத்தின் பாதை வளர்ந்து குஜராத், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் என விரிந்திருப்பதைக் காண மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இது உறுதியாக சமுதாய மாற்றத்தையும் குழந்தைகளிடையே எதிர்கால மலர்ச்சியையும் உருவாக்கும். பல்வேறு மாநிலங்களில் இத்திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்த எனது இதயங்கனிந்த பாராட்டுகளும் வாழ்த்துகளும்.

*- க. ஆனந்தராஜ்*
*வணிகத்தலைவர், அபராஜிதா, மதுரை.*